Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, ஜனவரி 11, 2025 | இதழ் 273

# மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம், திருச்சி, சென்னை, சென்னை புறநகரில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிக்க 7 சிறப்பு நீதிமன்றங்கள் சட்டசபையில் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, 11 ஜனவரி 2025: பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிக்க 7 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று சட்டசபையில் முதலமைச்சர் ஸ்டாலின் இன்று அறிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று பதிலளித்தார்.

அப்போது எதிர்க்கட்சிகள் அளித்த புகார்கள், குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தார். உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கும் பதிலளித்து பேசினார்.

பல்வேறு அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளை விசாரிக்க மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, சென்னை மற்றும் சென்னையின் சுற்றுப்புற பகுதிகளில் ஏழு தனிச் சிறப்பு நீதிமன்றங்கள் புதிதாக அமைக்கப்படும்.

இத்தகைய குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க, மாவட்டந்தோறும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில சிறப்புக் குழு அமைக்கப்படும். பாலியல் குற்றங்களில் தண்டனை பெற்று, சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கு, முன்விடுதலை கிடைக்காதவகையில தமிழ்நாடு சிறைத் துறை விதிகள் திருத்தம் செய்யப்படும்.

மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி, உள்ளாட்சி அமைப்புகளை ஒட்டியுள்ள கிராமங்களும் மிக விரைவாக வளர்ச்சி அடைந்து வருவதால் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சி அமைப்புகளின் சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன. புதிய மாநகராட்சிகள், நகராட்சிகள் உதயமாகி இருக்கின்றன.

இந்த நகரங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும்வகையில் இந்த அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள், பேரூராட்சிகளில் புதிய சாலைகளை அமைத்திடவும், பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்திடவும், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைகளால் சேதப்பட்டுள்ள சாலைகளை சீரமைத்திடவும் வரும் ஆண்டுகளில் 3 ஆயிரத்து 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புர சாலை பணிகள் மேற்கொள்ளப்படும்.

பல்வேறு கோரிக்கைகளை ஏற்று மக்களுக்கான போக்குவரத்து வசதியை மேம்படுத்த வரும் ஆண்டில் 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு விரைந்து கொண்டு வரப்படும்.

இந்த அரசு பதவி ஏற்றபின் ஏழை எளிய பட்டியலின மக்களுக்கு 2 லட்சத்து 67 ஆயிரத்து 437 மனைகளை வரன்முறைப்படுத்தி இ-பட்டா வழங்கப்பட்டிருக்கின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும்விதமாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சீர்செய்தும் புதியதாக நிலங்களை கையகப்படுத்தியும் ஒரு லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் அவர்களுக்கு வழங்கப்படும்.

எங்களுக்கு வாக்களித்த மக்களும், எங்களுக்கு வாக்களிக்காத மக்களாக இருந்தாலும், எங்கள் மனச்சாட்சிதான் நீதிபதிகள். மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எங்கள் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல், முழு உழைப்பை தந்து, நாங்கள் ஆட்சி நடத்திக்கொண்டு வருகிறோம். அடுத்து அமையப் போகும் அரசும், தி.மு.க. அரசு தான். அதில் எங்களுக்கு இம்மியளவும் சந்தேகமில்லை; தமிழ்நாட்டு மக்களுக்கும் சந்தேகமில்லை.

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' எனும் நான்' தமிழ்நாட்டை மேம்படுத்தும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாக இருப்பவன். இதைத்தவிர எனக்கு வேறு பணிகள் இல்லை. 'என்னுடைய சிந்தனையும் செயலும் தமிழ்நாடு, தமிழ்நாடு என்றும் தமிழையும், தமிழர்களையும், தமிழ்நாட்டையுமே சுத்தி, சுத்தி வருகிறது.

நான் பிறந்தபோது ஸ்டாலின் என்று பெயர் சூட்டுன கலைஞர், வளர்ந்த போது 'உழைப்பு'னுதான் பெயர் சூட்டினார். அப்படி உழைக்கக் கத்துக் கொடுத்தவரும் அவர்தான். "ஓய்வெடுத்து உழையுங்கள்" என்று ஆலோசனை சொல்கிறவர்களிடம், 'ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவரின் மகன் நான்' என்று சொல்லுவேன். "தலைவர் பாதையே தனிப்பாதை, கலைஞர் பாதையே வெற்றிப்பாதை" என்று செயல்பட்டு வருகின்றவன் நான்.

பெரியார், அண்ணா ஆகிய இருபெரும் தலைவர்கள் உருவாக்கிக் கொடுத்த கொள்கைகளை கலைஞர் வழிநின்று காப்பேன். கலைஞர் அடித்தளமிட்ட நவீனத் தமிழ்நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக, முன்னோடி மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன். மக்களாட்சிக் காலத்தில் திராவிட மாடல் ஆட்சிதான் பொற்கால ஆட்சி என்று வரலாறு பதிவு செய்யும். இந்தப் பொற்கால ஆட்சியே காலம் காலமாகத் தொடரும். இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.



# இருட்டு அரசியல் நடத்துகிறவர்களுக்கு கறுப்பு சட்டை அணிய தார்மீக உரிமை இல்லை 1 லட்சம் போராட்டங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறோம்: முதல்வர் ஸ்டாலின் தகவல் 12 ஆயிரம் கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளேன்

சென்னை, 11 ஜனவரி 2025: போராட்டம் நடத்த உரிமை இல்லை என்று சொல்கிறார்கள். 1 லட்சம் போராட்டங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறோம் என்று சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

சட்டமன்றப் பேரவையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியதாவது:

போராட்டம் நடத்துகிற உரிமை இல்லையென்று சிலர் தவறான வாதங்களை வைக்கிறார்கள். உண்மையை சொல்ல வேண்டுமென்றால், "அளவுக்கு மீறிய ஜனநாயகவாதியாக இருக்கிறீர்கள்" என்றுதான் என்னை சிலர் விமர்சிக்கிறார்களேதவிர நான் சர்வாதிகாரியாக இருப்பதாக யாரும் சொல்லமாட்டார்கள். அது என்னுடைய இயல்பும்கூட இல்லை.

எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, கூட்டணிக் கட்சிகளும் போராட்டம் நடத்தலாம் என்று சொல்பவன் நான். போராடலாம், தவறில்லை. போராட வேண்டிய இடத்தில் போராடலாம். தவறில்லை. போராட்டம் நடத்த ஒதுக்கப்பட்ட இடத்தில் போராடலாம்; தவறில்லை. இத்தகைய போராட்டங்களுக்கு உரிய காலத்தில் அனுமதி கேட்டால் நாங்கள் கொடுத்திருக்கிறோம். நாங்கள் ஆட்சிக்கு





வந்ததிலிருந்து தமிழ்நாட்டில் இதுவரை சுமார் ஒரு லட்சம் போராட்டங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம்.

சட்டம் ஒழுங்கைப் பற்றி சிலர் இங்கே குறிப்பிட்டார்கள். என் தலைமையிலான அரசு காவல் துறை சுதந்திரமாக செயல்படுகிறது. ரவுடியிசத்தில் ஈடுபடுகிறவர்கள் மேல் தயவு தாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் கொலைகள், ரவுடிகள் சம்பந்தப்பட்ட கொலைச் சம்பவங்கள் மற்றும் ரவுடிகள் தொடர்புடைய சாதிய கொலைச் சம்பவங்கள் குறைந்திருக்கிறது.

எங்கும் அமைதி நிலைநாட்டப்பட்டு வருகிறது. குற்றம் பெருமளவு தடுக்கப்பட்டிருக்கிறது. மீறி குற்றம் நடந்தால், உடனடியாக குற்றவாளி கைது செய்யப்படுகிறார். எந்தக் குற்றவாளியையும் யாரும் காப்பாற்றுவது இல்லை. உரிய தண்டனை, கடுமையான தண்டனை பெற்றுத் தரப்பட்டிருக்கிறது. யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதில் யாருக்கும் எந்தச் சலுகையும் தரப்படவில்லை.

பெரும்பாலான கொலைகள் -குடும்ப பிரச்சினை, காதல் விவகாரம், பணம் கொடுக்கல் வாங்கல், நிலப் பிரச்சினை, தனிப்பட்ட முன் விரோதம், வாய்த்தகராறு போன்ற காரணங்களுக்காகவே நடந்திருக்கிறது. அரசியல் காரணங்கள், சாதிய கொலைகள், மத ரீதியான கொலைகள், ரவுடி கொலைகள் தி.மு.க. ஆட்சியில் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு, குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலேயே பாதுகாப்பு மிக்க முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

எதிர்க்கட்சி அண்ணா தி.மு.க. சார்பில் கருப்புச் சட்டை அணிந்து வந்தபோது எனக்கு கோபம் வரவில்லை. சிரிப்புதான் வந்தது. இப்படியாவது கருப்புச் சட்டை போடுகிறார்களே என்று மகிழ்ச்சியடையிறேன். கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு வரலாம். அது உங்கள் உரிமை, அதில் நான் தலையிட விரும்பவில்லை.

என்னோட கேள்வியெல்லாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில சட்டமன்றத்தை மதிக்காமல் ஓர் கவர்னர் நடந்துகொள்கிறார். அவரைக் கண்டித்து கருப்புச் சட்டை அணியும் துணிச்சல் உங்களுக்கு ஏன் இல்லை? என்பதுதான் என்னுடைய கேள்வி. இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதியைகூட தர மறுத்து, இரக்கமில்லாமல் நடந்துகொள்கிற ஓர் ஒன்றிய அரசினைக் கண்டித்து, நீங்கள் கருப்புச் சட்டை அணிந்திருந்தால் நான் உங்களை வாழ்த்தியிருப்பேன், மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

தேசிய கல்விக் கொள்கை மூலமாக பள்ளிக் கல்வியையும், யு.ஜி.சி. மூலமாக கல்லூரிக் கல்வியையும் சிதைக்க நினைக்கிற, பாசிசக் கல்விக் கொள்கையை கண்டித்து கருப்புச் சட்டையை நீங்கள் அணிந்திருந்தால், மனதார உங்களைப் பாராட்டியிருப்பேன்.

ஆட்சியில் இருந்த காலம் முதல் பா.ஜ.க.-க்கு நீங்கள் துணையாக நின்றிருக்கிறீர்கள். இருட்டு அரசியல் நடத்துகிறவர்களுக்கு கருப்புச் சட்டை அணிய எந்த தார்மீக உரிமையும் இல்லை.

எங்களைப் பொறுத்தவரைக்கும், தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளில், பெரும்பாலானவற்றை நாங்கள் நிறைவேற்றிவிட்டோம். தேர்தலின்போது சொல்லாத பல திட்டங்களையும் செயல்படுத்திக் காட்டியிருக்கிறோம். இன்னும் சில பாக்கி இருக்கிறது. உறுப்பினர்கள் அதனை வெளிப்படையாகச் சொல்வதை, அவர்களின் முகத்தின் மூலமாக நான் பார்க்கிறேன்.

இந்த மூன்றாண்டு காலத்தில், சுமார் 12 ஆயிரம் கோப்புகளில் நான் கையெழுத்து போட்டிருக்கிறேன். இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# கோலாகலத் திருவிழாவாக மாறிய 'உழவன் ஃபவுண்டேஷனின் உழவர் விருதுகள் 2025' விவசாயத்துறையில் சேவைமனப்பான்மையோடு இயங்கும் 5 பேருக்கு கௌரவம்



சென்னை, 11 ஜனவரி 2025: விவசாயத்தில் சாதனை புரிபவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்து பங்களிப்பவர்களையும் கௌரவப்படுத்தி அங்கீகரிக்கும் உழவன் ஃபவுண்டேஷனின் 'உழவர் விருதுகள் 2025' விழா கோலகலமாக சென்னையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக நடிகர் அரவிந்த் சாமி, நடிகை சரண்யா பொன்வண்ணன், இயக்குநர் மாரி செல்வராஜ் மற்றும் எழுத்தாளர் பவா செல்லத்துரை ஆகியோர் கலந்துக் கொண்டார்கள்.

மேலும் இந்நிகழ்வில் வேளாண் துறைசார் வல்லுநர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்ட இந்த விழா இனிதே நடைபெற்றது.

இதில்

• சிறந்த பெண் வேளாண் தொழில் முனைவோர் விருது திருமதி. சுகந்திக்கும்
• நீர் நிலைகளை மீட்டெடுத்தலுக்கான சிறந்த பங்களிப்பு விருது திருமதி. சியாமளாவுக்கும்
• மாபெரும் வேளாண் பங்களிப்புக்கான விருது - கலசப்பாக்கம் பாரம்பரிய விதைகள் மையத்திற்கும்
• கால்நடை துறையில் சிறந்த பங்களிப்பு வழங்கியதற்கான விருது கால்நடை மருத்துவர் திருமிகு. விஜயகுமாருக்கும்
• சிறந்த பெண்கள் வேளான் கூட்டமைப்புக்கான விருது - நம்மாழ்வார் இயற்கை சிறுதானிய உழவர் உற்பத்தியாளர் குழுவுக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் உழவர் விருதோடு இரண்டு இலட்ச ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவில் நடிகரும் உழவன் ஃபவுண்டேஷன் நிறுவனருமான கார்த்தி அவர்கள் பேசும் போது, "இந்த நிகழ்வுக்காக ஆண்டு முழுக்க காத்திருக்கிறோம். நமக்கு நிறைய வெளிச்சம் கிடைக்கிறது. அந்த வெளிச்சத்தின் மூலம் தங்களின் வாழ்க்கையை மற்றவர்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்களை,

குறிப்பாக உழவுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மக்களை எல்லோருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும், இவர்கள்தான் நாம் கொண்டாடப்பட வேண்டியவர்கள் என்பதை மக்களுக்கு சொல்ல வேண்டும் அதற்காகதான் உழவர் விருதை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

"இவ்வாறு செய்வது அவர்களுக்கு ஊக்கமளிக்கும். இவர்கள் அங்கீகாரம் பெறுவதின் மூலம், மேலும் பலர் இவர்களை போல் மாற வேண்டும் என்று நினைப்பார்கள். இதன் மூலம் பல உழவர்கள் பயனடைவார்கள் என நம்புகிறேன்" என்றார்.

மேலும் கார்த்தி அவர்கள் பேசுகையில் "பொங்கல் தினத்தில் மட்டும் உழவர்களை பற்றி நினைக்காமல், எல்லா நேரங்களிலும் நம்மால் முடிந்த பங்களிப்பை தொடர்ந்து செய்ய வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

சரண்யா பொன்வண்ணன் பேசும் போது, "கார்த்தி இப்படியொரு விஷயத்தை செய்வதே பெருமையாக இருக்கிறது. எல்லோரும் சுயமாக வீட்டில் செடி வளர்ப்போம், தோட்டம் அமைப்போம். அதைப்பற்றி பெருமையாக பேசிக் கொள்வோம். இதை ஒரு பெரிய திட்டமாக உருவாக்கி, நிறைய பேருக்கு அங்கீகாரம் கொடுப்பதோடு, உழவன் ஃபவுண்டேஷன் மூலமாக உழவர்களுக்கு நிறைய உதவி செய்து வருவதை பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கிறது. இது மிகப்பெரிய சமூக சேவை இதை தொடர்ந்து கார்த்தி செய்யறத நினைத்து பெருமையாக இருக்கிறது". என்றார்

நடிகர் அரவிந்த் சாமி பேசும் போது, "நான் எனது 15 வயது வரை அப்பா, அம்மாவுடன் நசரத்பேட்டையில் உள்ள தோட்டத்தில்தான் தான் வசித்து வந்தேன்.

நானும் சிறு வயதில் விவசாயத்தில் இருந்ததால் விவசாயிகளின் கஷ்டம் எனக்கும் புரியும். அவர்களை கௌரவிக்கும் இப்படி ஒரு விழாவில் கலந்துக் கொண்டதில் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார்.

இயக்குநர் மாரி செல்வராஜ் பேசும் போது, "இதுவரை எல்லா மேடையும் நம்மை மேலே தூக்கி செல்லும் வகையில் தான் இருக்கும். ஆனால், இந்த மேடை தான் நாம் யார், நாம் எங்கிருந்து வந்திருக்கிறோம், நமது அடிவேர் என்ன என்பதை அறிந்து கொள்ள உதவுகிறது. விவசாயத்தில் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா என்பதை இங்கு வந்த பிறகு தான் அறிந்து கொண்டேன். இது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது," இந்த விழாவில் கலந்துக் கொண்டதே பெருமையாக இருக்கு" என்று கூறினார்.

இந்த சிறப்பம்சங்கள் இன்னும் பல கோடி பேரை சென்று சேரும் பொருட்டு, உழவன் ஃபவுண்டேஷனின் 'கார்த்தியின் உழவர் திருநாள்' விழா, ஜனவரி 14, தமிழர் திருநாளான பொங்கல் தினத்தன்று, ஸ்டார் விஜய் தொலைக்காட்சியில் காலை 11.00 மணி முதல் 12.30 மணி வரை சிறப்பு நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகவுள்ளது.

# இந்த பொங்கலை வைரங்களுடன் கொண்டாடுங்கள், ஜோயாலுக்காஸ் பிரில்லியன்ஸ் ஜுவல்லரி கண்காட்சியில் !



சென்னை, 11 ஜனவரி 2025: ஜோயாலுக்காஸ், உலகின் ஃ பேவரிட் ஜுவல்லரி - பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ - வை சென்னையில் அமைந்துள்ள தனது பிரசாந்த் கோல்டு டவர் ஷோரூமில் ஜனவரி 11 முதல் 26 வரை வெகு விமரிசையாக நடத்துகிறது. இந்த பிரம்மாண்டமான கண்காட்சி, மிகப்பெரிய ஜுவல்லரிகளின் அணிவகுப்பு அனைத்தும் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு இந்த பொங்கல் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியானதாக, அற்புத ஷாப்பிங் அனுபவமாக ஜோயாலுக்காஸ் மாற்றியமைப்பது குறிப்பிடத்தக்கது. வைரங்களின் பேரழகான இந்த டிசைன்கள் மற்றும் லேட்டஸ்ட் கலெக்ஷன்களை காணும்போது பார்வையாளர்களுக்கு மெய்சிலிர்க்கும் வியப்பான அனுபவம் கிடைப்பது உறுதி. அன்கட் வைரங்கள் பிரஸ்ஸியஸ் ஜுவல்லரி, தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட - ஸ்பெஷல் ஜுவல்லரிகள் என்று பலவிதமான ஆபரணங்கள் இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது. ஆடம்பரத்தையும் அழகையும் மறுவரையறை செய்யும் தனித்துவ டிசைன்களில் வடிவமைத்த அரிதான ஆபரணங்கள் இந்த குறிப்பிட்ட கண்காட்சியில் மட்டுமே இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து ஜோயாலுக்காஸின் சேர்மன் & நிர்வாக இயக்குனர் திரு. ஜோய் ஆலுக்காஸ் குறிப்பிடும்போது "பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ - அசாத்தியமான கைவினை திறன், புதுமை, வைரங்களின் காலத்தை வெல்லும் பேரழகு ஆகியவற்றை கொண்டாடும் மாபெரும் நிகழ்வு. பொங்கல் சமயத்தில் இந்த கண்காட்சியை நாங்கள் சென்னையில் நடத்துவதற்கு மிகுந்த ஆர்வத்தோடு காத்திருக்கிறோம். விதவிதமான டிசைன்களையும், கலெக்ஷன்களையும் வாடிக்கையாளர்கள் தங்கள் பரம்பரை பொக்கிஷங்களுடன் சேர்த்துக்கொள்வதற்கு இது ஒரு சரியான வாய்ப்பாகவும் இருக்கும்" என்று தெரிவித்தார்

பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ ஒரு கண்காட்சி என்பதை தாண்டி கலை வடிவங்களை ஆராதிக்கும் ஒரு கொண்டாட்டமாக அமையவுள்ளது. இதுவரை கண்டிராத ஸ்டைல், கண்களை கவர்ந்திருக்கும் அழகிய டிசைன்கள், ஜோயாலுக்காஸின் தனித்துவமான கைவினைத் திறன் என்று இந்த கண்காட்சிகொண்டாட்டங்களின் முழு வடிவமாக அமையவுள்ளது உறுதி.

இந்த விஷாக்காலத்தை இன்னும் விஷேசமாக மாற்றிட ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேல் வைர ஆபரணங்கள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ஜோயாலுக்காஸ் ஒரு கிராம் தங்க நாணயத்தை இலவசமாக வழங்குகிறது. மேலும் ஒவ்வொரு பர்ச்சேஸ்க்கும் நிச்சயமான இலவச பரிசுகளையும் அளித்து வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது. தலைசிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டு மிகவும் ஆடம்பரமான சூழலில் சர்வதேச தரநிலைகளைப் பின்பற்றி சென்னையில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. உங்கள் உணர்வை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக அல்லது தலைமுறைகள் தாண்டி காலத்தை கடந்த பொக்கிஷமாக ஒரு வைர ஆபரணத்தை நீங்கள் வாங்க விரும்பினால் ஜோயாலுக்காஸின் இந்த ஜுவல்லரி கண்காட்சிதான் சரியான சந்தர்ப்பம். அனைவருக்கும் ஜோயாலுக்காஸின் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள். 11 முதல் 26 ஜனவரி 2025 வரை, வாழ்வில் ஒரு முறை என்பது போல் சென்னை பிரசாந்த் கோல்டு டவரில் அபூர்வமாக நடைபெறும் இந்த வைர நகை கண்காட்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை நழுவவிடாதீர்கள்.

# மதுரை டங்க்ஸ்டன் போராட்டம்: பொதுமக்கள் மீதான வழக்குகளை ரத்து செய்யும் கோரிக்கை பரிசீலிக்கப்படும் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, 11 ஜனவரி 2025: மதுரையில் டங்ஸ்டன் போராட்டம் தொடர்பாக மக்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை ரத்து செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சி தலைவரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டசபையில் கவர்னர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், பல்கலைக்கழகங்களில் துணை வேந்தரை நியமிப்பது தொடர்பாக கவர்னருக்கு அதிகாரம் வழங்கும் வகையில், பல்கலைக்கழக மானியக் குழு (யூ.ஜி.சி.), வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கும் வகையில், மத்திய அரசு அறிவித்த புதிய கல்விக் கொள்கையை அண்ணா தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகளும் எதிர்த்து வருகின்றன.

யூ.ஜி.சி-ன் புதிய வரைவு அறிக்கை, மாநில பல்கலைக்கழகத்தின் உரிமையை பறிப்பது மற்றும் அதன் தன்னாட்சித் தன்மையை அபகரிக்கும் அபாயமும் உள்ளது. மாநில அரசின் உரிமையைப் பறிக்கிற விதமாக, துணை வேந்தரை நியமிக்கும் தேர்தல் குழுவை கவர்னர் தீர்மானிப்பார் என்ற வரைவு அறிக்கையை அண்ணா தி.மு.க. எதிர்க்கிறது. இது குறித்த அரசின் தீர்மானத்தை நாங்கள் ஆதரித்திருக்கிறோம். அந்த வரைவு அறிக்கையை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், - டங்க்ஸ்டன் விவகாரத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள பொதுமக்கள், பேரணிகள் நடத்தி, அதனால் அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எதிர்க்கட்சி தலைவர் வைத்திருக்கிறார். அது நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

# எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்? தி.மு.க. அரசு மீது விஜய் கடும் தாக்கு



சென்னை, 11 ஜனவரி 2025: "நீட் தேர்வு ரத்து விவகாரத்தில் மக்களை தி.மு.க. அரசு ஏமாற்றுகிறது. எந்தப் பொய்யையும் சொல்லி, தமிழக மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கனவு காணும் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம், இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

எத்தனைக் காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே நம் நாட்டிலே.... என்ற பாடல் வரிகள், தற்போதைய தமிழக ஆட்சியாளர்களுக்கு மிகப் பொருத்தமாக உள்ளன.

தேர்தலின்போது போலி வாக்குறுதிகள் அளித்து, மக்களை நம்பவைத்து ஏமாற்ற வேண்டும், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு மீண்டும் மக்களை ஏமாற்ற வேண்டும் என்பது தான் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணமாக உள்ளது. இதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. அதில் மிக முக்கியமானது, நீட் தேர்வு விவகாரம் சார்ந்தது.

கடந்த 2021 தேர்தல் பிரச்சாரத்தின் போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வைக் கண்டிப்பாக ரத்து செய்வோம், நீட் தேர்வை ரத்து செய்யும் ரகசியம் எங்களுக்குத் தெரியும் என்று பிரச்சாரம் செய்து, தமிழக மக்களை நம்ப வைத்தவர்கள், தற்போதைய ஆட்சியாளர்கள். ஆனால் தற்போது நீட் தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் ஒன்றிய அரசிற்குத் தான் உள்ளது. மாநில அரசால் ரத்து செய்ய முடியாது என்று தெரிவித்திருப்பது வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல் அல்லவா?

எந்தப் பொய்யையும் சொல்லி, தமிழக மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கனவு காணும் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம், இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை.

இவ்வாறு விஜய் தெரிவித்துள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# டால்மியா சிமெண்ட் நிறுவனம் தனது 'ஆர்.சி.எஃப் எக்ஸ்பர்ட்' சிமெண்ட் ரகத்தை அறிமுகம் செய்தது



திருச்சி, 11 ஜனவரி 2025: இந்தியாவின் முன்னணி சிமெண்ட் நிறுவனமான டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், இந்தியாவில் உள்ள அதன் முக்கிய சந்தைகளில் 'ரூப், காலம், பவுண்டேஷன் (ஆர் சி எஃப்) எக்ஸ்பர்ட்' பிராண்ட் பொசிஷனிங்கின் கீழ் அதன் புதுப்பிக்கப்பட்ட சிமென்ட் போர்ட்ஃபோலியோவை பெருமையுடன் வெளியிட்டது. அதன் முதன்மை தயாரிப்புகளான டால்மியா டிஎஸ்பி ஆர்சிஎஃப் எக்ஸ்பர்ட் ++ மற்றும் டால்மியா சிமெண்ட் (டிசி) ஆர்சிஎஃப் எக்ஸ்பர்ட், மேம்பட்ட அதிநவீன நானோ பிணைப்பு தொழில்நுட்பம் (என் பி டி) ஆகியவற்றைக் கொண்டுள்ளது, அவை நவீன கட்டுமானத்தின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆர் சி எஃப் எக்ஸ்பர்ட் அதிக வலிமை, சிறந்த அரிப்பு எதிர்ப்பு மற்றும் காலத்திற்கும் அழியாத உறுதியான கட்டுமானங்களை உறுதி செய்கிறது. 80 ஆண்டுகளுக்கும் மேலான நம்பகமான பாரம்பரியத்தைக் கொண்ட தாய் வணிகப்பெயரான டால்மியா சிமெண்ட் (டி சி), அதன் நிலையான தரம் மற்றும் நிரூபிக்கப்பட்ட நம்பகத்தன்மைக்காக தனித்து நிற்கிறது, இது பல்வேறு கட்டுமானத் தேவைகளுக்கு விருப்பமான தேர்வாக அமைகிறது. டால்மியா டிஎஸ்பி ஆர்சிஎஃப் ++, போர்ட்ஃபோலியோவில் பிரீமியம் அல்டிமேட் கான்கிரீட் எக்ஸ்பர்ட் ஆக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது என் பி டி ஐ உயர் எதிர்வினை சிலிக்கா மற்றும் துளை குறைப்பு தொழில்நுட்பத்துடன் (பி ஆர் டி) ஒருங்கிணைத்து, சுப்ரீம் தரத்தை வழங்குகிறது. நாடு முழுவதும் உள்ள 50000+ சேனல் பங்காளர்களைக் கொண்ட டால்மியா சிமென்டின் பரந்த நெட்வொர்க்கால் ஆதரிக்கப்பட்ட தயாரிப்பு வெளியீட்டு நிகழ்வுகள், முக்கிய விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரரர்கள் மற்றும் மேசன்களின் தீவிர பங்கேற்பைக் கண்டன. கட்டுமான நடைமுறைகள் தொடர்ந்து உருவாகி வருவதால், வீடு கட்டுபவர்கள் இப்போது விரைவான அமைவு நேரம், சிறந்த வேலைத்திறன் மற்றும் சுற்றுச் சூழல் சவால்களுக்கு மேம்பட்ட எதிர்ப்பு போன்ற அம்சங்களை நாடுகிறார்கள். களத்தில் ஈடுபடும் செயல்பாடுகள் மற்றும் ஊடாடும் அமர்வுகள் ஆர் சி எஃப்எக்ஸ்பர்ட் வரம்பின் மேம்பட்ட அம்சங்கள் மற்றும் சிறந்த செயல்திறனை எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிகழ்வுகள் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியைக் கொண்டாடியதுடன், வலிமை, நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் ஆகியவற்றில் புதிய தொழிற்துறை வரையறைகளை அமைக்கும் தீர்வுகளை வழங்குவதற்கான டால்மியா சீமெந்தின் அர்ப்பணிப்பை வலுப்படுத்தியது. "ஆர் சி எஃப் ஸ்ட்ராங் டோகர் ஸ்ட்ராங்" என்ற நம்பிக்கையைத் தழுவி, வலுவான, அதிக நெகிழ்திறன் கொண்ட வீடுகளை உருவாக்க இந்நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டுஇருக்கின்றது

தென்னிந்தியாவில், இந்நிறுவனம் இப்பகுதியில் முதலிடத்தில் உள்ளது மேலும் இந்நிறுவனமானது கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் 17421+க்கும் மேற்பட்ட சேனல் கூட்டாளர்களின் வலுவான கூட்டாண்மையை கொண்டுள்ளது. நிலையான வாழ்வாதாரங்கள், திறன் மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மேற்பார்வை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதன் விரிவான சமூக ஈடுபாடு முயற்சிகள், இந்தியாவின் கட்டுமான நிலப்பரப்பில் நம்பகமான பங்குதாரராக அதன் நற்பெயரை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது

# பொள்ளாச்சி விவகாரத்தில் தாமதமாக வழக்குப் பதிவு: முதல்வர் சொன்னதே உண்மை சபாநாயகர் அப்பாவு தீர்ப்பு



சென்னை, 11 ஜனவரி 2025: பொள்ளாச்சி விவகாரத்தில் தாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னது உண்மை என சட்டசபையில் சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற சட்டசபை கூட்டத்தில் பொள்ளாச்சி சம்பவத்தில் 24 மணி நேரத்தில் வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எடப்பாடி பழனிசாமி கூறியிருந்தார். இதற்கு மறுப்பு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியிருந்தார். இதனால் சபாநாயகர் அப்பாவு இருதரப்பும் ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவித்து இருந்தார்.

இதனால் சபாநாயகர் அப்பாவு உத்தரவை ஏற்று இருதரப்பிலும் ஆதாரங்கள் இன்று வழங்கப்பட்டது. பொள்ளாச்சி விவகாரத்தில் 12 நாட்களுக்கு பின்னர் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும், 24 மணி நேரத்தில் வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான ஆதாரத்தை எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் அண்ணா தி.மு.க.வினர் 20 பேர் சென்று சபாநாயகரிடம் வழங்கினர்.

இதையடுத்து இருதரப்பினரும் அளித்த ஆதாரங்களை ஆராய்ந்து பொள்ளாச்சி விவகாரத்தில் தாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னது உண்மை என சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார். பாலியல் வன்கொடுமை நடந்து 12 நாட்களுக்கு பின்னரே எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு தரப்பு ஆதாரங்களையும் நான் பார்த்துவிட்டேன், நான் கூறும் தீர்ப்பு தான் இறுதியான தீர்ப்பு. இருவரும் இதோடு முடித்துக் கொள்ளுங்கள்" என்று சபாநாயகர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சபாநாயகரின் பேச்சுக்கு சட்டசபையில் அண்ணா தி.மு.க.வினர் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.

# மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் மேம்பட்ட தோல், முடி மற்றும் உடல் பராமரிப்பு சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் காயா தனது புதிய கிளினிக்கை வெளியிட்டது




சென்னை, 11 ஜனவரி 2025: தோல் மருத்துவர்களின் மிகப்பெரிய வலையமைப்பைக் கொண்ட இந்தியாவின் முன்னணி தோல் பராமரிப்பு பிராண்டான காயா, சென்னையில் தனது ஐந்தாவது கிளினிக் மற்றும் இந்தியா முழுவதும் 77 வது கிளினிக்கை தொடங்குவதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது! துடிப்பான கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள இந்த அதிநவீன வசதி, தோல் பராமரிப்பு, முடி பராமரிப்பு மற்றும் உடல் பராமரிப்பு சேவைகளை வழங்குகிறது. இந்த புதிய கிளினிக்கின் மூலம், காயா, சென்னையின் செழித்து வரும் சமூகத்தை நிபுணத்துவ பராமரிப்பு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் அவர்களின் தோல் பராமரிப்பு, முடி பராமரிப்பு மற்றும் உடல் பராமரிப்பு இலக்குகளை அடைய அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கௌரவ விருந்தினராகப் பணியாற்றிய, முன்னாள் மிஸ் சென்னையின் புகழ்பெற்ற சம்யுக்தா சண்முகநாதன் முன்னிலையில் பிரமாண்டமான வெளியீட்டு விழா நடைபெற்றது. ஃபேஷன் மற்றும் ஆரோக்கியத்திற்கான அவரது பங்களிப்புகளுக்காக அறியப்பட்ட சம்யுக்தாவின் வருகை இந்நிகழ்வை இன்னும் மறக்கமுடியாததாக மாற்றியது.

புதிய காயா கிளினிக்கில், பரந்த அளவிலான தோல், முடி மற்றும் உடல் சிகிச்சைகள் மற்றும் பிரத்யேக ஆலோசனைகள் மற்றும் தோல் மருத்துவர் அறைகளுடன் ஐந்து முழு வசதிகளுடன் கூடிய சேவை அறைகள் உள்ளன.

ஆன்டி ஏஜிங், முகப்பரு தீர்வுகள், பளபளப்பு, நிறமி, முடி பராமரிப்பு, மற்றும் உடல் வரையறைகள், லேசர் முடி குறைப்பு மற்றும் ஐவி ட்ரிப்ஸ் உள்ளிட்ட பல்வேறு கவலைகளை நிவர்த்தி செய்ய காயா விரிவான அளவிலான மேம்பட்ட சிகிச்சைகளை வழங்குகிறது. உடலைக் கட்டமைக்க, கூல்ஸ்கல்ப்டிங் மற்றும் சிஎம் ஸ்லிம் போன்ற புதுமையான சிகிச்சைகள் ஆக்கிரமிப்பு இல்லாத கொழுப்புக் குறைப்பு மற்றும் சருமத்தை இறுக்கமாக்குகின்றன. பி ஆர் பி சிகிச்சை மற்றும் ஆன்டி ஏஜ் போன்ற முடி பராமரிப்பு தீர்வுகள், மேம்பட்ட முடி வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கின்றன. மேம்பட்ட ஃபேஷியல், கெமிக்கல் பீல்ஸ், க்யூ-ஸ்விட்ச் லேசர் சிகிச்சைகள் மற்றும் டெர்மாஃப்ராக் ஆகியவற்றுடன் தோல் புத்துணர்ச்சி மேம்படுத்தப்படுகிறது, இவை அனைத்தும் சருமத்தைப் புதுப்பிக்கவும் புத்துயிர் பெறவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தனிப்பயனாக்கப்பட்ட தோல் பராமரிப்பு நோயறிதலை மறுவரையறை செய்யும் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தளமான கிளியர் ஏஐ தொழில்நுட்பத்தால் கயாவின் சலுகைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளரின் தோல் நிலையை ஆழமாக பகுப்பாய்வு செய்வதன் மூலம், கிளியர் ஏஐ பொருத்தமான சிகிச்சை பரிந்துரைகளை வழங்குகிறது, ஒவ்வொரு வாடிக்கையாளரும் தங்கள் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்ய தனித்தனியாக வடிவமைக்கப்பட்ட தீர்வுகளைப் பெறுவதை உறுதிசெய்கிறது. காயாவில் உள்ள ஒவ்வொரு சிகிச்சையும் நிபுணத்துவம் வாய்ந்த தோல் மருத்துவர்களால் தனிப்பயனாக்கப்பட்டது, பாதுகாப்பான, பயனுள்ள மற்றும் பொருத்தமான முடிவுகளை வழங்குகிறது.

காயாவின் குளோபல் சிஇஓ, ராஜீவ் சூரி, அறிமுகம் குறித்து தனது உற்சாகத்தை வெளிப்படுத்தினார்: "சென்னை எப்போதும் புதுமைகளின் மையமாக இருந்து வருகிறது, மேலும் எங்கள் 5வது கிளினிக் கிழக்கு கடற்கரை சாலையில் தொடங்கப்பட்டதன் மூலம், காயா மேம்பட்ட தோல் சிகிச்சையை கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறது. பரந்த பார்வையாளர்கள். கிழக்கு கடற்கரை சாலை ஒரு பிரீமியம் மற்றும் மிகவும் விரும்பப்படும் பகுதி, இது பல்வேறு மற்றும் ஆற்றல்மிக்க சமூகத்தை ஈர்க்கிறது, இது கயாவின் உலகத் தரம் வாய்ந்த தோல் பராமரிப்பு, முடி பராமரிப்பு மற்றும் உடல் பராமரிப்பு தீர்வுகளுக்கான சரியான இடமாக அமைகிறது. சென்னையில் வசிப்பவர்களின் பல்வேறு தேவைகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் இந்த புதிய கிளினிக்கின் மூலம் அனைவருக்கும் தனிப்பயனாக்கப்பட்ட, தொழில்முறை மற்றும் அதிநவீன சிகிச்சைகள் கிடைப்பதை உறுதிசெய்கிறோம். சிறந்து விளங்கும் கயாவின் அர்ப்பணிப்பு விரிவடைந்து வருகிறது, இது உயர்மட்ட தோல் மருத்துவத்தை அனைவருக்கும் அணுகக்கூடியதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குகிறது.

சிறப்பு விருந்தினர் சம்யுக்தா சண்முகநாதன் பாராட்டு தெரிவித்தார்.

"காயாவின் புதிய கிளினிக்கை சென்னைக்கு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். டாக்டர் தலைமையிலான சிகிச்சைகள் மற்றும் தோல் பராமரிப்புக்கான தனிப்பயனாக்கப்பட்ட அணுகுமுறை ஆகியவற்றின் சரியான கலவையானது கயாவை உண்மையிலேயே வேறுபடுத்துகிறது. அவர்களின் விதிவிலக்கான கவனிப்பை நானே அனுபவித்ததால், கயா அதன் தொழில்முறை மற்றும் வெளிப்படையான சேவைகளுடன் தோல் மருத்துவத்தை மறுவரையறை செய்கிறது என்று நான் நம்பிக்கையுடன் கூற முடியும். இத்தகைய புதுமையான மற்றும் நம்பகமான சேவைகளுக்கு சென்னை தகுதியானது, அதற்கு காயா மிகவும் பொருத்தமானது.

# தேனி போலீஸ் ஸ்டேஷனில் கொள்ளை முயற்சி; போலீசார் மீது தாக்குதல்



சென்னை, 11 ஜனவரி 2025: தேனியில் போதைப்பொருள் நுண்ணறிவு போலீஸ் ஸ்டேஷனில் திருட முயன்ற போது, அதனை தடுத்த போலீசார் மீது கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தினர்.

தேனி மாவட்டம் ஈஸ்வர் நகரில் போதைப்பொருள் நுண்ணறிவு போலீஸ் ஸ்டேஷன் அமைந்துள்ளது. இங்கு சட்டவிரோதமாக விற்பனை மற்றும் கடத்தி வரப்பட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வைக்கப்படுவது வழக்கம். இந்த நிலையில், அந்த ஸ்டேஷனின் உள்ளே மர்ம நபர்கள் உள்ளே புகுந்தனர். இதனைக் கண்ட அக்கம்பக்கத்தினர், உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில், ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போலீசார், போதைப்பொருள் நுண்ணறிவு போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்து வந்துள்ளனர். இதனை அறிந்த கொள்ளையர்கள், உடனடியாக அங்கிருந்து தப்பியோட முயன்றனர். அப்போது, அவர்களை போலீஸ்காரர் ஒருவர் மடக்கி பிடிக்க முற்பட்டார்.

இதனை பார்த்து உஷாரான கொள்ளையர்கள், அந்த போலீசாரை பயங்கரமாக தாக்கி விட்டு, தப்பி ஓடினர். இதில், போலீஸ்காரர் பலத்த காயமடைந்தார். ஆனால், அதன் பின்னால் வந்த மற்ற போலீசார், சாதுர்யமாக செயல்பட்டு, அந்த கொள்ளையர்களை பிடித்தனர்.

பின்னர், இருவரையும் கைது செய்து அல்லிநகரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு சென்றனர். அவர்களிடம், பெரியகுளம் டி.எஸ்.பி., நல்லு விசாரணை நடத்தி வருகின்றார். ஸ்டேஷனில் இருக்கும் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களை எடுத்துச் செல்ல இவர்கள் வந்தார்களா? என்ற கோணத்தில் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# “ட்யூவோலிங்கோ ஆனது ‘தமிழிலிருந்து ஆங்கிலம் கற்கவும்‘ பாடத்தை தமிழ்நாட்டு கற்பவர்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது“

மதுரை, 11 ஜனவரி 2025: உலகின் மிகப்புகழ் பெற்ற மொழி கற்கும் செயலியான ட்யூவோலிங்கோ ஆனது தனது மிக சமீபத்திய பாடமான 'தமிழிலிருந்து ஆங்கிலம் கற்கவும்' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அறிமுகமானது தமிழ் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தகவமைக்கப்பட்டுள்ளது மற்றும் அவர்கள் தங்கள் ஆங்கில மொழி புலமையை கட்டமைத்து அதிகளவில் கல்வி மற்றும் தொழில்முறை வாய்ப்புகளை அணுக உதவவிருக்கிறது. இந்தியாவில் ஐந்தாவது அதிகம் பேசப்படும் மொழியான தமிழானது நாட்டின் கலாச்சார மற்றும் மொழி சார்ந்த பன்முகத்தன்மையின் ஒரு முக்கிய அங்கமாகும். இப்பாடத்தின் மூலம் ட்யூவோலிங்கோ ஆனது தமிழ் மக்கள் தங்கள் அபிலாசைகளை நம்பிக்கையுடனும் திறம்படவும் அடைய உதவும் இந்நிறுவனத்தின் உறுதிப்பாட்டை உறுதிபடுத்துகிறது.




ட்யூவோலிங்கோவில் நான்காவது இண்டிக் மொழி வந்துள்ளது 'தமிழிலிருந்து ஆங்கிலம் கற்கவும்' என்ற பாடமானது இந்தி, பெங்காலி மற்றும் தெலுங்கு ஆகியவற்றை தொடர்ந்து ட்யூவோலிங்கோ தளத்தில் தோன்றும் நான்காவது இண்டிக் பாடத்தை குறிப்பதாகும். பாடங்களை பிராந்திய மொழிகளில் வழங்குவதன் மூலம் ட்யூவோலிங்கோ ஆனது மொழி கற்பதிலுள்ள தடைகளை தகர்த்து எறிந்து வருகிறது மற்றும் அதை அனைவரும் அணுகும்படியாக்கி வருகிறது. இப்பாடமானது கேம் சார்ந்த, ஆர்வத்தை தூண்டுகிற மற்றும் கலாச்சார அடிப்படையில் ஒத்துப்போகின்ற கற்றல் அனுபவத்தை வழங்கி தமிழ் மக்களுக்கு ஆங்கிலத்தை அவர்கள் சுய வேகத்திலேயே கட்டணமின்றி சுலபமாக கற்க உதவுகிறது.

'தமிழிலிருந்து ஆங்கிலம் கற்கவும்' இன் அறிமுகத்தை பற்றி ட்யூவோலிங்கோ இந்தியாவின் பிராந்திய மார்கெட்டிங் இயக்குனரான கரன்தீப் சிங் கபானி கூறுகையில், "மொழி கற்றலை அனைவருக்கும் அணுகும்படியாகவும் ஒத்த விதத்தில் அமையுமாறும் செய்வதில் மொழிபெயர்ப்பு என்பது எங்கள் இலக்கின் மையப்பகுதியிலுள்ளது. 'தமிழிலிருந்து ஆங்கிலம் கற்கவும்' பாடத்தின் மூலம் ஆங்கிலம் கற்பது கலாச்சார ரீதியில் ஒத்துபோகும் வகையிலும் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் இருக்குமாறு தமிழ் மக்களுக்கு ஆங்கிலம் கற்கும் ஒரு வாய்ப்பை வழங்குவதில் மிகவும் குதூகலம் கொள்கிறோம். இந்தியாவின் மொழி பன்முகத்தன்மை எங்கள் பயனர்களின் பிரத்தியேக தேவைகளை பிரதிபலிக்கும் வகையில் பாடங்களை உருவாக்க எங்களை ஊக்கப்படுத்துகிறது மற்றும் இந்த அறிமுகமானது நாடு முழுவதுமுள்ள கற்பவர்களுக்கு அதிகாரமளிக்கும் எங்கள் பயணத்தில் மற்றொரு படிநிலையாகும்," என்று விளக்கினார்.

தமிழ்நாட்டால் ஊக்கமளிக்கப்பட்ட ஒரு திரைப்பட விளம்பரம் இந்த அறிமுகத்தை கொண்டாடுவதற்கு, ட்யூவோலிங்கோ ஆனது தமிழ்நட்டின் கலாச்சாரத்துடன் ஆழமாக பிணைந்துள்ள வகையில் ஒரு துடிப்புமிக்க விளம்பரத்தை உருவாக்குவதற்கு கிரியேட்டிவ் ஏஜென்சியான டேலண்டடுடன் கரம் கோர்த்துள்ளது. "இங்கிலீஷ் வாத்தி ட்யூவோ" என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்த விளம்பரமானது தமிழ் பாப் கலாச்சாரத்தின் திரைப்படம் சார்ந்த பிரமாண்டத்தை ட்யூவோவின் குறும்புத்தனம் மற்றும் வினோதம் நிறைந்த பாத்திரத்துடன் ஒன்று கோர்க்கிறது. இந்த சின்னம் ஆனது "இங்கிலீஷ் வாத்தி" என்ற ஒரு புது புனைப்பெயரை ஏற்றுள்ளது மற்றும் தமிழ்நாட்டின் செறிந்த கலாச்சார நூல்பின்னலில் தன்னை ஒருங்கிணைத்துக்கொள்ளும் அதே வேளையில் ஒரு ஆசிரியர் என்ற பாத்திரத்தையும் ஏற்கிறது.

குத்து பீட்ஸ், டான்ஸ் சீக்வென்சுகள் மற்றும் ரியல் லைஃப் நடிப்பு பாவனைகளுடன் கூடி சமூகத்திற்கு முதன் முதல் வெளியிடப்படும் இந்த விளம்பரமானது அதிரடி விஷுவல்களுடன் தத்ரூபமாக அமைந்துள்ளது. குதூகலம் மற்றும் ஈடுபாடு ஆகியவற்றை கிளறிவிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த விளம்பரமானது கலாச்சார கதை சொல்லும் யுக்தி மூலம் பயனர்களுடன் நெருங்குகின்ற ட்யூவோலிங்கோவின் திறமையை கோடிட்டு காட்டுகிறது.

"சமூக ஊடகங்களானவை திரைப்பட ஆர்வம் மற்றும் கதைகூறுவது ஆகியவற்றின் மீதான தமிழ்நாட்டின் ஆழ்ந்த நட்புடன் நாங்கள் கனெக்ட் செய்ய உதவும் ஒரு தளத்தை அமைத்து கொடுத்துள்ளது," என்று டேலண்டடின் பிராண்ட் யுக்தி மற்றும் கிரியேட்டிவை சேர்ந்த அபிஷேக் குமார் மற்றும் நிகில் உன்னி கூறுகின்றனர். "நாங்கள் 'இங்கிலீஷ் வாத்தி ட்யூவோ'-உடன் மாநிலத்தின் செறிந்த கலாச்சார பாரம்பரியத்தை கொண்டாடும் ஒரு விளம்பரத்தை மட்டுமல்லாமல் தமிழ் ஆடியன்சுடன் ஒத்துப்போகும் விதத்தில் ட்யூவோவின் விநோதமான ஆளுமையை நிஜ வாழ்க்கையில் கொண்டு வர உதவும் வகையிலும் உருவாக்க இலக்கு கொண்டோம். குத்து பீட்சிலிருந்து சினிமா பாணி டான்ஸ் சீக்வென்சஸ் வரை ஒவ்வொரு கூறும் சமூக ஊடகங்களில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது."

தமிழ்நாட்டு கற்பவர்களுக்கு அதிகாரமளித்தல் ட்யூவோலிங்கோவின் 'தமிழிலிருந்து ஆங்கிலம் கற்கவும்' பாடமானது மொழி கற்பதை அனுகக்கூடியதாகவும், மகிழ்ந்தனுபவிக்கக்கூடியதாகவும் திறம்பட இருக்குமாறும் ஆக்குவதன் தளத்தின் குறிக்கோளை வலுப்படுத்துகிறது. தமிழ்நாட்டு கற்பவர்களின் பிரத்தியேக தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் ட்யூவோலிங்கோ ஆனது தனிநபர்களுக்கு சுய மற்றும் தொழில்முனையும் வளர்ச்சியை எட்ட உதவும் கருவிகளை வழங்கி அவர்களுக்கு ஆற்றல் வழங்குவதையும் மொழி இடைவெளிகளை அடைப்பதையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

# டால்மியா சிமெண்ட் நிறுவனம் தனது ‘ஆர்.சி.எஃப் எக்ஸ்பர்ட்‘ சிமெண்ட் ரகத்தை அறிமுகம் செய்தது

திருச்சி, 11 ஜனவரி 2025: இந்தியாவின் முன்னணி சிமெண்ட் நிறுவனமான டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், இந்தியாவில் உள்ள அதன் முக்கிய சந்தைகளில் ‘ரூப், காலம், பவுண்டேஷன் (ஆர் சி எஃப்) எக்ஸ்பர்ட்’ பிராண்ட் பொசிஷனிங்கின் கீழ் அதன் புதுப்பிக்கப்பட்ட சிமென்ட் போர்ட்ஃபோலியோவை பெருமையுடன் வெளியிட்டது. அதன் முதன்மை தயாரிப்புகளான டால்மியா டிஎஸ்பி ஆர்சிஎஃப் எக்ஸ்பர்ட் ++ மற்றும் டால்மியா சிமெண்ட் (டிசி) ஆர்சிஎஃப் எக்ஸ்பர்ட், மேம்பட்ட அதிநவீன நானோ பிணைப்பு தொழில்நுட்பம் (என் பி டி) ஆகியவற்றைக் கொண்டுள்ளது, அவை நவீன கட்டுமானத்தின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆர் சி எஃப் எக்ஸ்பர்ட் அதிக வலிமை, சிறந்த அரிப்பு எதிர்ப்பு மற்றும் காலத்திற்கும் அழியாத உறுதியான கட்டுமானங்களை உறுதி செய்கிறது. 80 ஆண்டுகளுக்கும் மேலான நம்பகமான



பாரம்பரியத்தைக் கொண்ட தாய் வணிகப்பெயரான டால்மியா சிமெண்ட் (டி சி), அதன் நிலையான தரம் மற்றும் நிரூபிக்கப்பட்ட நம்பகத்தன்மைக்காக தனித்து நிற்கிறது, இது பல்வேறு கட்டுமானத் தேவைகளுக்கு விருப்பமான தேர்வாக அமைகிறது. டால்மியா டிஎஸ்பி ஆர்சிஎஃப் ++, போர்ட்ஃபோலியோவில் பிரீமியம் அல்டிமேட் கான்கிரீட் எக்ஸ்பர்ட் ஆக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது என் பி டி ஐ உயர் எதிர்வினை சிலிக்கா மற்றும் துளை குறைப்பு தொழில்நுட்பத்துடன் (பி ஆர் டி) ஒருங்கிணைத்து, சுப்ரீம் தரத்தை வழங்குகிறது. நாடு முழுவதும் உள்ள 50000+ சேனல் பங்காளர்களைக் கொண்ட டால்மியா சிமென்டின் பரந்த நெட்வொர்க்கால் ஆதரிக்கப்பட்ட தயாரிப்பு வெளியீட்டு நிகழ்வுகள், முக்கிய விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் மேசன்களின் தீவிர பங்கேற்பைக் கண்டன. கட்டுமான நடைமுறைகள் தொடர்ந்து உருவாகி வருவதால், வீடு கட்டுபவர்கள் இப்போது விரைவான அமைவு நேரம், சிறந்த வேலைத்திறன் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு மேம்பட்ட எதிர்ப்பு போன்ற அம்சங்களை நாடுகிறார்கள். களத்தில் ஈடுபடும் செயல்பாடுகள் மற்றும் ஊடாடும் அமர்வுகள் ஆர் சி எஃப்எக்ஸ்பர்ட் வரம்பின் மேம்பட்ட அம்சங்கள் மற்றும் சிறந்த செயல்திறனை எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிகழ்வுகள் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியைக் கொண்டாடியதுடன், வலிமை, நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் ஆகியவற்றில் புதிய தொழிற்துறை வரையறைகளை அமைக்கும் தீர்வுகளை வழங்குவதற்கான டால்மியா சிமெந்தின் அர்ப்பணிப்பை வலுப்படுத்தியது. "ஆர் சி எஃப் ஸ்ட்ராங் டோ கர் ஸ்ட்ராங்" என்ற நம்பிக்கையைத் தழுவி, வலுவான, அதிக நெகிழ்திறன் கொண்ட வீடுகளை உருவாக்க இந்நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டுஇருக்கின்றது

தென்னிந்தியாவில், இந்நிறுவனம் இப்பகுதியில் முதலிடத்தில் உள்ளது மேலும் இந்நிறுவனமானது கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் 17421+க்கும் மேற்பட்ட சேனல் கூட்டாளர்களின் வலுவான கூட்டாண்மையை கொண்டுள்ளது. நிலையான வாழ்வாதாரங்கள், திறன் மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மேற்பார்வை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதன் விரிவான சமூக ஈடுபாடு முயற்சிகள், இந்தியாவின் கட்டுமான நிலப்பரப்பில் நம்பகமான பங்குதாரராக அதன் நற்பெயரை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

# உலகெங்கிலும் உள்ள இந்திய தூதரகங்கள் உற்சாகமான கொண்டாட்டங்களுடன் 18 வது வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின கொண்டாட்டங்களில் இணைந்தன

சென்னை, 11 ஜனவரி 2025: பிரவாசி பாரதிய திவஸ் மாநாடு புவனேஸ்வரில் அதன் துடிப்பான கொண்டாட்டங்களைத் தாண்டி, உலகெங்கிலும் உள்ள இந்திய தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்கள் பண்டிகையைக் குறிக்க இணைந்ததால் உலகளவில் எதிரொலித்தது.

சீஷெல்ஸில், இந்திய உயர் ஸ்தானிகராலயம் பிபிடி திறப்பு விழாவின் சிறப்புத் திரையிடலை ஏற்பாடு செய்தது, அதே நேரத்தில் சிலியில் உள்ள இந்திய தூதரகம் தொடக்க நடவடிக்கைகளை வெளிப்படுத்த இதேபோன்ற நிகழ்வை நடத்தியது. சவுதி அரேபியாவின் ரியாத்தில் உள்ள இந்திய தூதரகம், புகழ்பெற்ற கலைஞர் முகமது வக்கீலின் கஜல்கள் மற்றும் பாடல்களைக் கொண்ட ஒரு துடிப்பான கலாச்சார மாலையில்




பங்கேற்பாளர்களை மகிழ்வித்தது. இதற்கிடையில், நார்வேயில், இந்திய தூதரகம் கெல்லரில் உள்ள ஜே.கே விருந்து மண்டபத்தில் ஒரு நிகழ்வை நடத்தியது, அங்கு 200 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இந்திய புலம்பெயர்ந்தோரின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைக் கொண்டாட கூடியிருந்தனர்.

18 வது பிரவாசி பாரதிய திவாஸ் கொண்டாட்டங்கள் ஜனவரி 8 ஆம் தேதி இளைஞர் பிரவாசி பாரதிய மாநாட்டின் தொடக்கத்துடன் தொடங்கியது. இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர், இளைஞர் விவகார அமைச்சர் ஸ்ரீ மன்சுக் மாண்ட்வியா மற்றும் ஒடிசா முதல்வர் திரு மோகன் சரண் மாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி 9 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி 18 வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டை திறந்து வைத்தபோது கொண்டாட்டங்கள் ஒரு பெரிய உச்சத்தை எட்டின. உலகெங்கிலும் உள்ள இந்திய சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் புகழ்பெற்ற தனிநபர்கள் மற்றும் பிரதிநிதிகளை இந்த நிகழ்வு ஒன்றிணைத்தது. இதில் பங்கேற்றவர்களில், 300க்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் அடங்கிய மிகப்பெரிய பிரதிநிதிகள் குழுவுடன் ஓமன் தனித்து நின்றது.

இந்த உலகளாவிய கொண்டாட்டங்கள் இந்தியாவிற்கும் அதன் புலம்பெயர்ந்தோருக்கும் இடையிலான நீடித்த பிணைப்பை வெளிப்படுத்தின, ஒற்றுமை உணர்வை உருவாக்கும் அதே நேரத்தில் அவர்களின் சாதனைகளைக் கொண்டாடின. இந்த நிகழ்வு ஜனவரி 10 ஆம் தேதி நிறைவடைய உள்ளது, ஜனாதிபதி திரௌபதி முர்மு மதிப்புமிக்க பிரவாசி பாரதிய சம்மான் விருதுகளை 27 நபர்களுக்கு வழங்குகிறார். விருது வழங்கும் வைபவத்தைத் தொடர்ந்து, இந்த துடிப்பானதும் அர்த்தமுள்ளதுமான நிகழ்வுகளின் நிறைவைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதி தனது நிறைவுரையை நிகழ்த்துவார்.

# அடுக்கடுக்கான மக்கள் நல திட்டங்களை கொண்டு வந்து சாதனை எது வெட்டிச் செலவு? எடப்பாடிக்கு ஸ்டாலின் கேள்வி

சென்னை, 11 ஜனவரி 2025: தமிழக அரசு வெட்டிச் செலவு செய்கிறது என்று கூறிய எடப்பாடி பழனிசாமிக்கு நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டு இதுவா வெட்டிச் செலவு என எடப்பாடி பழனிசாமிக்கு முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் நேற்று பேசும்போது, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசின் வருவாய் உயர்ந்திருந்தாலும், அரசின் கடன் சுமை பெருமளவு உயர்ந்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும், தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் செலவுகளை ‘வெட்டி செலவுகள்’ என்றும் குறிப்பிட்டார்.

இந்த திராவிட மாடல் அரசு மேற்கொண்ட செலவுகளை பொறுத்தவரை, தமிழ்நாட்டு வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, கடந்த 3 ஆண்டுகளில் பல மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது எல்லாமே தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களின் நலனுக்காகத்தான்.

விடியல் பயணத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், காலை உணவுத் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் போன்ற இந்தத் திட்டங்களுக்கு மேற்கொள்ளப்படக்கூடிய செலவுகள் எல்லாம் வெட்டிச் செலவுகள் என்றுதான் எதிர்க்கட்சித் தலைவர் நினைக்கிறாரா என்பதுதான் என்னுடைய கேள்வி?